DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 36/2017 |
| Deposition of Witness for | PW 5 |
| Name | ராஜா |
| Father / Husband Name | ஆண்டார் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 03rd December 2024.

---

**(1வது எதிரி இறந்துவிட்டார்).**

**(2, 3 எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் தற்சமயம் காரைக்குடி வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். சிவகங்கை மண்டலத் துணை வட்டாட்சியராக பணிபுரிந்த சமயம் வழக்கு சம்பவம் நடைபெற்றது. கடந்த 1970 ஆம் ஆண்டு சிவகங்கை பெரியார் நகர் திருப்பத்தூர் ரோடு கருப்பன் செட்டியார் மகன் கோவிந்தன் இருப்பு வண்ணாரப்பேட்டை சென்னை என்பவர் தான் ஒரு நிலமற்ற ஏழை விவசாயி என்றும் தனக்கு அரசுக்கு பாத்தியமான நிலத்தில் மேலவாணியங்குடி குரூப்பில் நில ஒப்படைவு வழங்குமாறு கோரியதன் பேரில்

Web Copy

மேலவாணிங்குடி குரூப் புல எண். 62/1 ல் 3.5 ஏக்கர் சர்வே 62/5 ல் 2.65 ஏக்கர் நிலத்தை ஒப்படைவு பெற்று அரசு அனுமதியின்றி விற்பனை செய்யக்கூடாது என்ற நிபந்தனைகளுடன் ஒப்படைவு வழங்கப்பட்ட நிலத்தை தனது சுவாதீனத்திற்கு எடுத்துக்கொண்டு சாகுபடி செய்யாமல் இருந்ததால் சிவகங்கையில் அன்றைய தினம் பணியில் இருந்த சிவகங்கை கோட்டாட்சியர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களால் 30.08.1983 ஆம் தேதி கோவிந்த செட்டியாருக்கு வழங்கப்பட்ட நிலத்தை உரிய திருத்தம் செய்து அரசு கணக்கில் கொண்டு வந்து மேற்படி ரத்து குறித்து 1 வது எதிரியான கோவிந்தன் செட்டியாருக்கு தகவல் தெரிவித்தும் நேரில் விசாரணையில் கலந்து கொள்ளாமல் மேற்படி நிலத்தை புல எண். 62/5 தனது தம்பியான 2 வது எதிரி வெங்கடாசலம் என்ற வெங்கட்ராமன் செட்டியார் மற்றும் வெங்கட்ராம செட்டியார் மகன் 3 வது எதிரி கண்ணன் ஆகியோருக்கு பதிவுப் பத்திரம் மூலம் 1983 ம் வருடம் பதிவு செய்து கொடுத்துள்ளார்.

2) அரசு அனுமதியின்றி விவசாயம் செய்வதற்காக பெற்ற நிலத்தை பயன்படுத்தாமல் அரசு நிலத்தை அபகரிக்கும் நோக்கில் தொடர்ந்து பதிவுப் பத்திரங்கள் மூலம் மாறுதல் செய்து மோசடி செய்துள்ளார்கள். மேற்படி வழக்கு சம்பந்தப்பட்ட சொத்து தொடர்பாக வருவாய் துறை ஆவணங்களான 1. அ பதிவேடு நகல், 2. புலப்பட நகல் மற்றும் அடங்கல் நகல் விசாரணைக்காக வழங்கினேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>2, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) மேற்படி சொத்து சம்பந்தமாக Assignment கிரயப் பத்திரத்திற்கு முன்பு உருவானதா அல்லது அதன் பின்பு உருவானதா என்றால் எனக்குத் தெரியாது. 13.07.1987 ம் தேதி மேற்படி சர்வே 62/5 ல் 2 ஏக்கர் 65 சென்ட் நிலம் முழுவதும் கிரயம் செய்யப்பட்டது என்றால் 1 ஏக்கர் 77 சென்ட் நிலம் கிரயம் செய்யப்பட்டது. Assignment 30.08.1983 ம் தேதி ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். Assignment தேதிக்கு முன்பே 2, 3 எதிரிகள் பத்திரப்பதிவு செய்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

2) 15.07.1983 ம் தேதி Assignment யை ரத்து செய்வதற்கு அறிவிப்பு செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. Assignment கொடுப்பதற்கோ அல்லது ரத்து செய்வதற்கோ கோட்டாட்சியருக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்றால்

webcopy

Assignment கொடுப்பதற்கு வட்டாட்சியருக்கு அதிகாரம் உள்ளது Assignment யை ரத்து செய்வதற்கு கோட்டாட்சியருக்குத் தான் அதிகாரம் உள்ளது. மேற்படி Assignment யை cancel செய்த சமயத்தில் எனக்கு எந்த பணியும் ஒதுக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை.

3) மேற்படி சர்வே எண் உள்ள இடத்தை நேரடியாகப் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆவணங்களை ஆய்வு செய்து அடங்கல், அ பதிவேடு நகல் மற்றும் புலப்படம் நகல் வழங்கினேன் என்றால் சரிதான். Assignment ரத்து செய்வது சம்பந்தமாக அனைத்து நடவடிக்கைகளும் கோட்டாட்சியர் தான் எடுத்தார் என்றால் சரிதான். கோட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் தான் நான் மேற்கண்ட ஆவணங்களை வழங்கினேன் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக கோட்டாட்சியர் Assignment யை ரத்து செய்த விவரம் தெரியாது என்றால் சரிதான்.

4) Assignment உத்தரவை நான் நேரடியாகப் பார்க்கவில்லை என்றால் சரிதான். அதில் என்ன உத்தரவு உள்ளது என்றும் என்ன நிபந்தனைகள் உள்ளது என்றும் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றும் சொன்னால் சரிதான். தற்போது நான் வட்டாட்சியராக பணிபுரிகிறேன் என்றால் சரிதான். பொதுவாக சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து நிலங்களும் Assignment நிலம் தான் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

5) பொதுவாக சிவகங்கை, மானாமதுரை வட்டத்தில் அதிகமாக Assignment நிலம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி குறிப்பிட்டு என்னால் கூற முடியாது. பொதுவாக Assignment கொடுக்கப்பட்ட கால அவகாசத்திற்குப் பிறகு அதை விற்பதற்கோ விலைசாற்றுவதற்கோ அந்த Assignment பெற்ற நபருக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு Assignment இடங்களை கம்பெனிகளுக்கு விற்பனை செய்து அதற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல அது பற்றி எனக்குத் தெரியாது.

6) நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.6 அ பதிவேட்டில் அரசு புஞ்சை என பதிவாகியுள்ளது என்றால் சரிதான். இது UDR அ பதிவேடு என்றால் சரிதான். UDR பதிவுகள் 1983, 1984 வருடத்தில் வந்தது என்றால் சரிதான். இந்த UDR அ பதிவேட்டிற்கு முன்பு SLR அ பதிவேடு உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில்

webcopy

புல எண். 62 ல் 1 முதல் 5 வரையுள்ள உட்பிரிவுகளில் தனிநபர்களின் பெயரில் பட்டா பதிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. SLR அ பதிவேட்டில் Assignment க்குப் பிறகு 1வது எதிரியின் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7) இவ்வழக்கு தொடர்புடைய தாவா சொத்துக்கள் சிவில் வழக்கு நிலுவையில் இருந்ததா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் பணியாற்றிய காலக்கட்டத்தில் மேற்படி சொத்து சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது என தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சென்னை உயர் நீதிமன்றம் மதுரைக் கிளையில் WP (MD) No.20060/2013 என்ற வழக்கில் Assignement ரத்து செய்யப்ட்டது தவறு என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரித்து ஆவணம் எதுவும் கைப்பற்றினார்களா என்றால் இல்லை வேண்டுகோள் கடிதம் கொடுத்து ஆவணங்களை வாங்கினார்கள்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஓம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 03.12.2024,**
நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

Web Copy

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 36/2017 |
| Deposition of Witness for | PW 6 |
| Name | மீனாட்சிசுந்தரம் |
| Father / Husband Name | பாண்டி |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 03rd December 2024.

---

**(1வது எதிரி இறந்துவிட்டார்).**

**(2,3 எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கையில் குடியிருந்து வருகிறேன். ஜெனரல் ஸ்டோர் வைத்து நடத்தி வருகிறேன். இவ்வழக்கு எதிரிகளைத் தெரியும். அவர்கள் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். இவ்வழக்கு 2 வது எதிரி தன் பெயரில் புல எண்.62/5 ல் 77 செண்ட் நிலம் இருப்பதாகவும் அதை தனது மகன்கள் 3 நபர்களுக்கு தானா செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் பிரித்துக்கொடுத்துள்தாகவும், அந்த இடம் நகராட்சி எல்லையை ஒட்டியிருப்பதால் குறைந்த விலைக்கு தருகிறேன் என சொன்னதால் மேலவாணியங்குடி குரூப் சர்வே எண்.62/5 ல் 77 செண்ட் நிலத்தை ரூபாய் 1 கோடியே

24 லட்சத்திற்கு பேசி முன்பணமாக ரூபாய் 5 லட்சத்தை இவ்வழக்கு 3 வது எதிரி மற்றும் அவரது 2 சகோதரர்கள் முன்னிலையில் 2 வது எதிரியிடம் 2011ம் வருடம் கிரய ஒப்பந்தத்தை அ.சா.ஆ.9 பதிவு செய்த அன்றே கொடுத்தேன்.

2) கிரய ஒப்பந்தத்தை பதிவு செய்து பணத்தைக் கொடுத்த தேதி, மாதம் எனக்கு தற்சமயம் ஞாபகமில்லை. அதன் பிறகு மேற்படி சொத்து தொடர்பாக அந்த சொத்தானது அரசுக்கு சொந்தமான நிலம் என 2009ம் வருடத்திலேயே வழக்கு நிலுவையில் இருப்பதாக விவரம் தெரிந்து நான் கோவிந்தன் செட்டியாரிடமும் அவரது மகன்களிடமும் சென்று கேட்டபோது வழக்கு அவர்களுக்கு சாதகமாக முடிந்துவிடும் என்று சொன்னார்கள்.

3) ஆனால், அரசாங்க இடத்திற்கு போர்ஜரியாக பட்டா பதிவுகள் ஏற்படுத்திக்கொண்டு என்னை ஏமாற்றி அரசு நிலத்திற்கு ரூபாய் 5 லட்சத்தை முன் பணமாக பெற்று போர்ஜரி ஆவணம் ஏற்படுத்தியதற்காக நான் குற்றப் பிரிவில் விவரம் தெரிவித்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**2,3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) நான் யாரிடம் சொத்தைக் கிரயம் பேசினேன் என்றால் சென்னையைச் சேர்ந்த வெங்கடாசலம் என்பவரிடம் கிரயம் பேசினேன். நான் கிரயம் பேசும்போது அவரது மகன்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நான் கிரயம் பேசும்போது மற்ற நபர்கள் யாரும் உடன் இல்லை என்றால் சரிதான். நான் சொத்தை வாங்குவதற்கு முன்பு ஆவணங்களை பரிசீலனை செய்தேனா என்றால் செட்டில்மெண்ட் பத்திரத்தைப் பார்த்தேன்.

2) வேறு ஆவணங்களை நான் பரிசீலனை செய்து பார்த்தேனா என்றால் இல்லை. நான் பட்டா விவரங்களை கேட்டுப் பெறவில்லை என்றால் சரிதான். சொத்து எவ்வாறு அவர்களுக்கு கிடைத்தது என்று கேட்டுத் தெரிந்துகொண்டேனா என்றால் அரசாங்கம் 2 ஏக்கர் 72 சென்ட் நிலத்தை Assignment கொடுத்தார்கள் என்றும் அந்த நிலத்தை மற்றவர்களுக்கு விற்றது போக 77 சென்ட் நிலத்தை கிரயம் கொடுத்தார்கள்.

3) கோவிந்த செட்டியார் மற்றும் பிள்ளைகள் 3 பேர் சேர்ந்து என்னிடம் நிலத்தை விலைபேசினார்கள். மேற்படி 77 சென்டிற்கு மொத்தமாக 1 கோடியே 24 லட்சம் என விலைபேசினோம். எவ்வளவு முன்பணம் கொடுத்தேன் என்றால் ரூபாய் 5 லட்சம் கொடுத்தேன். நான் பணமாகத்தான் மேற்படி

தொகையைக் கொடுத்தேன் என்றால் சரிதான். நாங்கள் பேசியவாறு கிரய ஒப்பந்தத்தை சிவகங்கை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டோம். நான் போலீசார் என்னை விசாரிக்கும்போது கிரய ஒப்பந்த ஆவணத்தைக் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன்.

4) நான் 2011 ம் ஆண்டு கிரய அக்ரிமெண்ட் பதிவு செய்தோம். கிரய அக்ரிமெண்டில் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ள நபர்களை யார் அழைத்து வந்தார்கள் என்றால் வெங்கடாசலம் அழைத்து வந்தார். கிரய அக்ரிமெண்ட் பதிவு செய்வதற்கான பத்திரங்களை யார் வாங்கினார்கள் என்றால் நான் தான் வாங்கினேன். கிரய அக்ரிமெண்ட் பதிவு செய்ய எவ்வளவு பத்திரம் வாங்கினோம் என்றால் ஞாபகமில்லை. நான் வெங்கடாசலத்திடம் கிரய ஒப்பந்தம் போடும்போது மேற்படி சொத்தானது அவரது பெயரில் தான் இருந்தது என்றும் அவருக்கு அவரது பெயரில் பட்டா, அடங்கல் போன்ற ஆவணங்கல் இருந்தது என்றும் அதனை பரிசீலனை செய்து தான் நாங்கள் மேற்படி கிரய ஒப்பந்தம் போட்டோம் என்றால் சரிதான்.

5) மேற்படி ஆவணங்கள் சரியாக இருந்ததால் தான் கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் போதிய பணம் இல்லாததால் கிரயப் பத்திரம் பதிவு செய்ய முன் வரவில்லை என்றும் போலீசார் கேட்டுக் கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வழக்கறிஞர் மூலம் சட்டப்பணியாக அறிவிப்பு செய்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

6) நான் அவ்வாறு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் நேரடியாக வெங்கடாசலம், முரளி மற்றும் பாஸ்கரன் ஆகியோர்களிடம் பணத்தை சென்னை சென்று கேட்டேன்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 03.12.2024,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.